செ.வெ.எண்: 09 நாள்: 04.10.2021

# மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் சுதந்திர போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் இன்று (04.10.2021) திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.க.செல்வராஜ் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுதந்திர போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## *இவ்விழாவில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது,*

திருப்பூர் குமரன் அவர்கள் 4.10.1904-ல் சென்னிமலையில் நாச்சிமுத்து முதலியார், கருப்பாயி தம்பதியினருக்கு முதல் பிள்ளையாக பிறந்தார். இவரது இயற்பெயர் குமாரசாமி ஆகும், குடும்ப சூழ்நிலை காரணமாக 5ம் வகுப்பிலேயே தனது பள்ளி படிப்பை முடித்துக்கொண்டார். வறுமையின் காரணமாக மேற்கொண்டு பள்ளிப் படிப்பை தொடர முடியாத காரணத்தால் தனது குடும்பத் தொழிலான கைத்தறி நெசவு செய்து வந்தார். இவர் தனது 19-வது வயதில் இராமாயி என்ற பெண்ணை 1923-ஆம் ஆண்டு மணந்தார்.

கைத்தறித் தொழிலில் போதுமான வருமானம் இல்லாததால் ஈரோடு சென்று பஞ்சு மில் ஒன்றில் எடைபோடும் குமாஸ்தாவாக பணிபுரிந்து வந்தார். ஆரம்பம் முதலே காந்தியடிகளின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட குமரன், நாட்டு விடுதலைக்காக காந்தியடிகள் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 04.01.1932-ல் காந்தியடிகளை ஆங்கிலேய அரசு கைது செய்தது. இச்செய்தி காட்டு தீ போல் நாடெங்கும் பரவியது காங்கிரஸ்

தொண்டர்கள் கொதித்தெளுந்தனர். இதனால் கண்டன போராட்டம் நடத்தவும், சட்டமறுப்பு இயக்கம் நடத்தவும் முடிவு செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் திருப்பூரில் போலீசாரின் தடையை மீறி 10.01.1932-ஆம் ஆண்டு தியாகி பி.எஸ்.சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் முதல் வரிசையில் காங்கிரஸ் கொடியை பிடித்து கொண்டு குமரன் வந்தார். வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கோஷம் எழுப்பிய போது போலீசாரின் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலால் உடலிலும், தலையிலும் பலத்த காயமேற்பட்டு தன் கையிலிருந்த கொடியை தரையில் சாய விடாமல் வந்தே மாதரம் என்ற முழக்கத்தை எழுப்பி தன் நாட்டு பற்றினை பறைசாற்றினார்.

குமரன் கீழே விழுந்தாலும் அவர் கையில் ஏந்தியிருந்த கொடி தரையில் விழாமல் பிடித்திருந்தார். திருப்பூர் வீதியிலே கொடிகாக்க குருதி வெள்ளத்தில் குமரன் வீழ்ந்து கிடந்தார். அடிபட்டு பலத்த காயங்களுடன் இருந்த குமரன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த போது சுயராஜ்யம் வராதா என இறுதிச் சொற்களுடன் 11.01.1932-ஆம் ஆண்டு இம்மண்ணுலகை விட்டு சென்றார். இதனால் இவர் கொடிகாத்த குமரன் எனப் பெயர் பெற்றார்.

விண்ணில் பறக்கும் கொடி மண்ணில் வீழ்வதா என தன்னுயிர் கொடுத்து நாட்டின் மானம் காத்த பெருமை இந்திய விடுதலை வரலாற்றில் தனிப்பெருமை வாய்ந்தது. திருப்பூர் குமரன் நினைவாக அவரது திருவுருவத்துடன் கூடிய அஞ்சல் வில்லையை 2007-ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்டு சிறப்பித்தது. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர் இரயில் நிலையம் எதிரில் மொத்தம் 11,195 சதுர அடி பரப்பளவில், அமைந்துள்ளது. நினைவு மண்டபம் கட்டிடம் 2500 சதுரடியில் ரூ.4,80,353 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

அன்னாரது திருவுருச்சிலைக்கு 118வது பிறந்தநாளான இன்று மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அதே போல், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தளியில் சுதந்திர போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் திருவுருவச் சிலை அமைக்கப்படவுள்ளது எனவும், மேலும், கீழ் பவானி பாசனம் உருவாக காரணமாக இருந்தவர், சுதந்திர போராட்டத்தின் போது 11 ஆண்டுகள் சிறையில் இருந்த திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு அரங்கம் மற்றும் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் படி, சுதந்திர போராட்ட தியாகிகளின் திருவுருவச்சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், மாநகராட்சி ஆணையாளர் திரு.கிராந்தி குமார் பாடி இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.செ.கு.சதீஸ்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.மா.சதீஸ்குமார், திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் திரு.ஜெகநாதன் அவர்கள், திருப்பூர் குமரன் அவர்களின் வாரிசு தாரர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**